Registered as News Paper பக்கங்கள் 04 விலை ரூபா: 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் நாளிதழ்

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஐப்பசி 26 (12-11-1991) செவ்வாய்க்கிழமை ஓசை: 267

## நான்கு தலைமுறை பின்னடைவு வடபகுதி மருத்துவம்

மருத்துவ, சுகாதாரத்துறையில் வடபகுதி நான்கு சந்ததி பின்னணியில் உள்ளதாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் முதன்மருத்துவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார். அண்மையில் மருத்துவ பயிற்சிநெறி ஒன்றைப் பின்பற்றுவதற்காக தென்பகுதிக்கு சென்று திரும்பிய அம்மருத்துவ அதிகாரி இரு பகுதிகளதும் மருத்துவ, சுகாதார நிலைமைகளை ஒப்பீடு செய்து விளக்கமளிக்கையில் இவ்வாறு தெரிவித்தார். மின்சாரம், மருத்துவ (4ஆம் பக்கம் பார்க்க)

இலவச இணைப்பு 1982 தொடக்கம் மண்மீட்புக்காய் உயிர் நீத்த மாவீரர்களின் குறிப்பேடு இணைக்கப்பட்டுள்ளது.

# மணலாற்றுப் பிரதேசத்தில் அகோரக் குண்டுவீச்சு

## இடைவிடாது எறிகணை வீச்சு

(யாழ்ப்பாணம்)

மணலாறு மாவட்டத்தில் உள்ள கொக்குத் தொடுவாய் பகுதியில் நேற்று பாரிய விமானக் குண்டு வீச்சுத் தாக்குதலை சிறிலங்கா விமானப்படை விமானங்கள் மேற்கொண்டன.

காலை 7.10 மணி தொடக்கம் 9.15 மணி வரைக்கும் தொடர்ச்சியாக மூன்று பொம்மர் விமானங்களும், உலங்கு வானூர்தி ஒன்றும், அவ்ரோ ஒன்றும் இக்குண்டு வீச்சுத் தாக்குதலில் ஈடுபட்டன.

மணலாறு இராணுவ முகாமிலிருந்து தொடர்ச்சியாக ஷெல் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்ட வண்ணமிருந்தது.

உலங்கு வானூர்தி அங்கு 50 கலிபர் தாக்குதலில் ஈடுபட்டது.

மாவீரர் நாள்

## மதகுருமார் புலிகள் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த இந்து, கிறிஸ்தவ மதப் பிரிவுகளைச் சேர்ந்த குருமார்களுக்கும் விடுதலைப் (3 ஆம் பக்கம் பார்க்க)

## மாவீரர்நாளைதேசியநாளாய் பிரகடனப் படுத்துவோம்

தமிழீழ மண்ணுக்காக போர்க்களம் சென்று சமாதியான புரட்சி வீரர்களினதும், வீரவேங்கைகளினதும் தியாகத்தையும், புனிதத்தையும் இதற்காக அனுபவித்த துன்பத்தையும், வேதனைகளையும் நினைவு கூரவும், கௌரவிக்கவும் இந்த நாளைத் தமிழர்களின் தேசிய நாளாகப் பிரகடனப் படுத்தியுள்ளோம்.

இவ்வாறு இவ்வாண்டுக்கான தமிழீழ மாவீரர் நாளை ஒட்டி தமிழீழ மாவீரர் நாள் பணிமனை நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. அச்செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது.

எந்த ஒரு மனிதனுக்குமே வாழவேண்டும் என்ற ஆசையுண்டு ஆனால், மாவீரர்களே, நீங்கள் அடிமைகளாக அல்ல சுதந்திரமாக வாழ வேண்டும் என்ற இலட்சியத்தில் உறுதியானீர்கள். சொந்த மண்ணைப் பறிகொடுத்து, அகதிகளாக வாழுகின்ற எமக்கு பட்டம், படிப்பு, பதவி, அந்தஸ்து அனைத்தும் இருந்தும் என்ன பயன், எங்கள் தேசம், எங்கள் மொழி, எங்கள் கலை பண்பாடு, எங்கள் பொருள் (3 ஆம் பக்கம் பார்க்க)

'சூழ்நிலை சரியானால்'

# பூர்வாங்க பேச்சிற்கு தொண்டா யாழ். வருவார்

(கொழும்பு)

சூழ்நிலை சரியாக இருப்பின் விடுதலைப் புலிகளுடன் பூர்வாங்கப் பேச்சுவார்த்தைகளுக்காகத் தான் யாழ்ப்பாணம் செல்லக்கூடும் என்று அமைச்சர் தொண்டமான் பி.பி.ஸி.க்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.

மேலும் அமைச்சர் தொண்டமான் தெரிவிக்கையில், பேச்சுவார்த்தைகளை எவ்வடிப்படையில் தொடங்கலாம், எந்த விஷயங்களைத் தாம் வலியுறுத்த விரும்புவார்கள் என்பதை விடுதலைப் புலிகள் தெரிவித்திருப்பதாகவும், இக்கடிதம் ஒரு சமாதானத் திட்டம் அல்ல என்றும் தொண்டமான் தெரிவித்தார்.

தனக்குக் கிடைத்த தகவலை அரசுடன் பகிர்ந்து கொள்வதா அல்லது தனது சொந்த முயற்சியைத் தொடர்ந்து மேற்கொள்வதா என்பது பற்றி தான் சிந்தித்து வருவதாகவும் தெரிவித்தார்.

மாவட்ட பாவனையாளர் பாதுகாப்பு குழுவின்

# புதிய தீர்மானத்தை நிறைவேற்ற யாழ். அரச அதிபர் பணிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தின் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் விநியோகம் தொடர்பாக மாவட்டப் பாவனையாளர் பாதுகாப்புக்குழு புதிய பல தீர்மானங்களை மேற்கொண்டிருக்கின்றது. இத்தீர்மானங்களை உடனடியாக நடைமுறைப்படுத்தும்படி யாழ். அரசாங்க அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் பிரதேச பாவனையாளர் பாதுகாப்புக் குழுக்களுக்கு பணிப்புரை வழங்கியிருக்கிறார். (3ஆம் பக்கம் பார்க்க)

## விசேட பரீட்சைக்கான சூழ் நிலை சரியில்லை

(கொழும்பு)

டிசம்பர் 1990 க. பொ. த (சா.த) விசேட பரீட்சையை நடத்துவதற்கான நேரகாலம் ...

## காங்கேசன் துறைமுகம்

# மாவீரர்நாளைதேசியநாளாய் பிரகடனப் படுத்துவோம்

தமிழீழ மண்ணுக்காக போர்க்களம், சென்று சமாதி களான புரட்சி வீரர்களின தும், வீரவேங்கைகளினதும் தியாகத்தையும், புனிதத்தை யும் இதற்காக அனுபவித்த துன்பத்தையும். வேதனைக ளையும் நினைவு கூரவும், கௌரவிக்கவும் இந்த நாளைத் தமிழர்களின் தேசிய நாளாகப் பிரகடனப் படுத்தி யுள்ளோம்.

இவ்வாறு இவ்வாண்டுக் கான தமிழீழ மாவீரர் நாளை ஒட்டி தமிழீழ மாவீரர் நாள் பணிமனை நேற்று வெளி யிட்ட செய்திக் குறிப்பொன் றில் தெரிவிக்கப்பட்டிருக்கின் றது. அச்செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப் பதாவது.

எந்த ஒரு மனிதனுக்குமே வாழவேண்டும் என்ற ஆசை யுண்டு ஆனால், மாவீரர்களே, நீங்கள் அடிமைகளாக அல்ல சுதந்திரமாக வாழ வேண்டும் என்ற இலட்சியத்தில் உறுதி யானீர்கள். சொந்த மண் ணைப் பறி கொடுத்து, அக திகளாக வாழுகின்ற எமக்கு பட்டம், படிப்பு, பதவி, அந் தஸ்து அனைத்தும் இருந்தும் என்ன பயன், எங்கள் தேசம், எங்கள் மொழி, எங்கள் கலை பண்பாடு, எங்கள் பொருள்

(3ஆம் பக்கம் பார்க்க)

## மாவட்ட பாவனையாளர் பாதுகாப்பு குழுவின்

# புதிய தீர்மானத்தை நிறைவேற்ற யாழ். அரச அதிபர் பணிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தின் அத் தியாவசிய உணவுப் பொருள் கள் விநியோகம் தொடர்பாக மாவட்டப் பாவனையாளர் பாதுகாப்புக்குழு புதிய பல தீர்மானங்களை மேற்கொண் டிருக்கின்றது. இத்தீர்மானங் களை உடனடியாக நடை முறைப்படுத்தும்படி யாழ். அரசாங்க அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் பிரதேச பாவனையாளர் பாதுகாப்புக் குழுக்களுக்கு பணிப்புரை வழங்கியிருக்கிறார்.

(3ஆம் பக்கம் பார்க்க)

# விசேட பரீட்சைக்கான சூழ் நிலை சரியில்லை

(கொழும்பு)

டிசம்பர் 1990 க. பொ. த (சா.த) விசேட பரீட்சையை நடத்துவதற்கான நேரகாலம் தற்போது இல்லை என யாழ் கல்வி உயர் கல்வி எம். டி. டி பீரிஸ் யாழ். பல்கலைக் கழக உப-வேந்தர் பேராசிரியர் அ. துரைராஜாவுக்கு எழுதி யுள்ள கடிதத்தில் தெரிவித் துள்ளார்.

க. பொ. த. (சா. த) 1991 ஆம் ஆண்டுப் பரீ ட்சை வரும் டிசம்பர் மாதத் தில் நடைபெறவுள்ளது. இப் பரீட்சை நடைபெறும் என்று

(3ஆம் பக்கம் பார்க்க)

# விரைவில் சார்க் மாநாடு கையூம் தீவிர முயற்சி

(கொழும்பு)

சார்க் உச்சி மாநாட்டை விரைவில் நடத்துவதற்கான ஒழுங்குகளைச் செய்வதற்கு மாலைதீவு ஜனாதிபதி மஹ் மூத் அப்துல் கையூம் தொடர் ந்தும் முயற்சி எடுத்து வருகி றார்.

மாலைதீவு வெளிவிவகார அமைச்சர் பதும்மா ஜமீல் இந் தியா, நேபாளம், பூட்டான் ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்து உச்சி மாநாட்டைக் கொழும்பில் விரைவில் நடத் துவது பற்றிப் பேச்சுவார்த்

(3ஆம் பக்கம் பார்க்க)

# தன்னாதிக்கத்திற்கு அச்சுறுத்தல் அரசாங்கம் அடிபணியாது

—பிரேமதாசா

(கொழும்பு)

"பலம் வாய்ந்த வெளி நாட்டு உள்நாட்டு சக்திக ளிடம் இருந்து இலங்கையின் தன்னாதிக்கத்திற்கு விடுக்கப் பட்ட அச்சுறுத்தல்களையும் ஏனைய பிரச்சினைகளையும் அரசாங்கம் கடந்த இரண் டரை ஆண்டுகளில் துணிச்ச லுடனும், திறமாகவும் முறி யடித்துள்ளது" என்று சிறி லங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தெரிவித் துள்ளார்.

நேற்று முன்தினம் ஹோம கமையில் எழுச்சிக் கிராம மொன்றை திறந்துவைத்துப் பேசிய போதே ஆர். பிரேம தாசா "மக்களால் தெரிவு செய்யப்பட்ட மக்களின் பலத் தில் இயங்கிவரும் தற்போ

(3ஆம் பக்கம் பார்க்க)

# இடைவிடாது எறிகணை வீச்சு

(யாழ்ப்பாணம்)

மணலாறு மாவட்டத்தில் உள்ள கொக்குத் தொடுவாய் பகுதி யில் நேற்று பாரிய விமானக் குண்டு வீச்சுத் தாக்குதலை சிறி லங்கா விமானப்படை விமானங்கள் மேற்கொண்டன.

காலை 7.10 மணி தொடக்கம் 9.15 மணி வரைக்கும் தொட ர்ச்சியாக மூன்று பொம்மர் விமானங்களும், உலங்கு வானூர்தி ஒன்றும், அவ்ரோ ஒன்றும் இக்குண்டு வீச்சுத் தாக்குதலில் ஈடுபட்டன.

மணலாறு இராணுவ முகா மிலிருந்து தொடர்ச்சியாக ஷெல் தாக்குதலும் மேற் கொள்ளப்பட்ட வண்ணமிருந் தது.

உலங்கு வானூர்தி அங்கு 50 கலிபர் தாக்குதலில் ஈடு பட்டது.

## 'சூழ்நிலை சரியானால்'

# பூர்வாங்க பேச்சிற்கு தொண்டா யாழ். வருவார்

(கொழும்பு)

சூழ்நிலை சரியாக இருப்பின் விடுதலைப் புலிகளுடன் பூர் வாங்கப் பேச்சுவார்த்தைக ளுக்காகத் தான் யாழ்ப்பாணம் செல்லக்கூடும் என்று அமைச் சர் தொண்டமான் பி.பி.ஸி. க்கு வழங்கிய பேட்டியில் தெரி வித்தார்

மேலும் அமைச்சர் தொண் டமான தெரிவிக்கையில், பேச் சுவார்த்தைகளை எவ்வ அடிப் படையில் தொடங்கலாம், எந்த விஷயங்களைத் தாங் கள் வலியுறுத்த விரும்புவார் கள் என்பது விடுதலைப் புலிகள் தெரிவித்திருப்பதாக வும், இக்கடிதம் ஒரு சமாதா னத் திட்டம் அல்ல என்றும் தொண்டமான் தெரிவித்தார்

தனக்குக் கிடைத்த தக வலை அரசுடன் பகிர்ந்து கொள்வதா அல்லது தனது சொந்த முயற்சியைத் தொட ர்ந்து மேற்கொள்வதா என் பதுபற்றி தான் சிந்தித்து வரு வதாகவும் தெரிவித்தார்.

# காங்கேசன் துறைமுகம் விரைவில் திறக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன் துறைமுகம் விரைவில் திறக்கப்படலாம். இது தொடர்பாக சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் விடுத லைப் புலிகளுடனும் அரசாங் கத்துடனும் நடத்திவரும் பேச் சுக்கள் வெற்றியளிக்கலாமென நம்பகரமான வட்டாரங்களி லிருந்து தெரியவருகிறது.

யாழ்ப்பாண செஞ்சிலுவைச் சங்க பொறுப்பதிகாரி திரு குனோடியோ பரங்சினி தமி ழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடத்திவிட்டு இப்பொழுது கொழும்பில் முப் படை தலைமையக அதிகாரிக ளுடன் கலந்தாலோசனை நடத்தி வருகிறார். இப்பேச் சுக்கள் குறிப்பிடத்தக்க முன் னேற்றத்தைக் கண்டிருப்பதா கவும் விரைவில் காங்கேசன் துறை துறைமுகம் மூலம் உணவு இறக்கப்படலாமென வும் தெரியவருகிறது. துறை முக தொழிலாளர், வாகனப் போக்குவரத்துப் பாதை, பாது காப்பு பிரதேசம் சம்பந்தப் பட்ட விடயங்களில் விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்திற் கும் மத்தியில் ஒரு உடன்பாடு ஏற்படும் நிலை உருவாகி வரு வதாக தெரிய வருகிறது

## ஊர்காவற்றுறையில்

# கண்ணிவெடித் தாக்குதல் 3படைகாயம்; வாகனம் சேதம்

(கொழும்பு)

ஊர்காவற்றுறைக்கும் அராலி வீதிக்கும் இடையில் வைத்து விடுதலைப் புலிகள் சிறிலங்கா இராணுவத்தினர் மீது கண்ணிவெடித் தாக்கு தல் நடாத்தியதில் மூன்று இராணுவத்தினர் காயமடைந் ததுடன் ஒரு கனரக வாகன

(3ஆம் பக்கம் பார்க்க)

# கப்பலில் கைதானவர்கள் யாழ்ப்பாண வாசிகள்

## கப்டன் தப்பிச் சென்றுவிட்டார்

(சென்னை)

காரைக்கால் கடற்பகுதியில் பிடிபட்ட படகுகளில் சென்று கொண்டிருந்த அனைவரும் யாழ்ப்பாண இளைஞர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

இத்தகவலை இதுபற்றிவிசா ரணை நடத்தி வரும் தமிழக பொலிஸ் அதிகாரி ஜே. ராம

(3ஆம் பக்கம் பார்க்க)

# மாவீரர் வாரம் 21-11-1991 — 27-11-1991

## மாவீரர் நாள் நினைவுகளின் முக்கிய கவனிப்பு

01) 1991 11 15 இலிருந்து 1991.11 21 வரை மாவீரர் எழுச்சி வாரமாக கொண்டாடப்படும்.

02) 1991 11 21 - 1991.11.27 வரை மாவீரர் வாரமாகக் கொண்டாடப்படும்.

03) 1991 11 21 ஆம் திகதி காலை 8.00 மணிக்கு தேசியக்கொடி ஏற்றப்படும்.

04) 1991.11.22 இலிருந்து 1991 11.27 வரை காலை 8.30 மணிக்கு தேசியக்கொடி வணக்கம் செலுத்தப்படும்.

05) 1991.11.26 ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணிக்கு மாவீரர் நினைவொலி எழுப்பப்படும்.

06) 1991 11.26 ஆம் திகதி நள்ளிரவு 12.02 மணிக்கு மாவீரர் சுடர் ஏற்றப்படும்.

07) 1991 11 27 ஆம் திகதி மாலை 4.00 மணிக்கு மாவீரர் நினைவுக் கூட்டம் நடைபெறும்.

மகாராஷ்டிராவில்

## நிலக் கண்ணி வெடியில் பத்துப்பொலிசார் பலி

(பம்பாய்)

மகாராஷ்டிராவில் ஏற்பட்ட கண்ணிவெடிச் சம்பவத்தில் பத்து பொலிசார் கொல்லப்பட்டுள்ளனர்.

இன்று சுட்சிரோலி மாவட்டத்தில் பிரம்மபொரியில் ஏற்பட்ட கண்ணி வெடிச் சம்பவத்திலேயே இந்த உயிரிழப்பு ஏற்பட்டது. இந்தத் தாக்குதலில் மேலும் 18 பொலிசார் காயமுற்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மக்கள் போர்க் குழுவைச் சேர்ந்த நக்சலைட்டுகளே இந்த நிலக்கண்ணி வெடியை வைத்ததாக மகாராட்டிர பொலிசார் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

நக்சலைட்டு எதிர்ப்புப் பொலிஸ் வெளிக் காவல் சாவடி ஒன்றில் நிறுத்தப்பட்டிருந்த சிறப்பு ரிசேவ் பொலிஸ் படை பொலிசாருக்கு சற்று நேரத்திற்கு ஓய்வு கொடுப்பதற்காக அந்தப் படையைச் சேர்ந்த அணியொன்று சென்று கொண்டிருந்த போதே இந்தச் சம்பவம் நடைபெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## நகைகளை தவிர்க்கவும்

(கொழும்புத்துறை)

யாழ் அரசினர் போதனா வைத்தியசாலையில் வார்டுகள் தங்கி இருந்து சிகிச்சை பெறவரும் நோயாளிகள் நகை அணிவதைத் தவிர்க்க வேண்டும் என வைத்தியசாலை வட்டாரங்கள் ஆலோசனை தெரிவித்துள்ளன.

இங்கு கூடுதலாக சத்திர சிகிச்சைப் பிரிவுக்கு அனுமதிக்கப்படுவோர் இதனை அதிக கவனத்தில் கொள்ள வேண்டும் என்றும், சத்திரசிகிச்சைக்கு உட்படும் வேளையில் நகைகளைக் கழற்றி வைக்க வேண்டி இருப்பதால் நகைகளை தாதியர்களே பொறுப்பேற்க வேண்டியுள்ளது என்றும், இதனால் வைத்தியசாலை ஊழியர்களுக்கு சிரமம் ஏற்படுகிறது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (24)


கம்பியூட்டர் கல்வி

DIPLOMA IN DATA PROCESSING AND COMPUTER PROGRAMMING IN BASIC LANGUAGE

★ dBASE III+
★ LOTUS 1-2-3
★ WORD STAR

புதிய பிரிவுகள் ஆரம்பம்:-

16-11-91 (சனி, ஞாயிறு வகுப்புகள்)

18-11-91 (திங்கள், புதன், வெள்ளி வகுப்புகள்)

மேலதிக விபரங்களுக்கு

Unikco Computer Centre
37, Clock Tower Road
Jaffna.

(B/8464)


## மின்னல் தாக்கியதில் இரு பெண்கள் காயம்

கடந்த சனிக்கிழமை பெய்த கடும் மழையின்போது வடமராட்சி கரையோரத்திலுள்ள பேய்ச் சந்தைதோனியில் தமது சாமிக் கடைகளை மேய்த்துக்கொண்டிருந்த இரு பெண்மணிகளை மின்னல் தாக்கியதில் அவர்கள் கடுமையான எரிகாயங்களுக்குள்ளாயினர். ஒருவர் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் பாதிப்புற்றார்.

அராலி மேற்கிலுள்ள பேய்ச்சல் தரைகளில் கால்நடைகளை மேய்த்துக்கொண்டிருந்த இரு பெண்மணிகளுக்கே இந்நிலை ஏற்பட்டது. (20)

## 3 தொன் ஹெரோயின் கடத்தல் முறியடிப்பு

(கராச்சி)

பாகிஸ்தானில் மூன்று தொன் ஹெரோயினும், நாற்பது தொன் மரிஜுவானாவும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

இது உலகின் மிகப் பெரிய போதை வஸ்துக் கடத்தல் முயற்சி என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்தக் கடத்தல் தொடர்பாக இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தெற்குப் பாகிஸ்தான் பலுசிஸ்தானில் இந்தக் கடத்தல் முயற்சி பொலிஸாரினால் முறியடிக்கப்பட்டது.

11,000 கோடிகள் ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன. மதுசாரம் பாகிஸ்தானில் சட்டப்படி தடைசெய்யப்பட்டுள்ளது.

## பண்ணிசைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

மாவட்ட மட்டத்திலான பண்ணிசைப் போட்டிகள் எதிர் வரும் 15 ஆம் திகதி கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது என யாழ். கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது.

## வீதி விபத்தில் பத்துப் பேர் பலி

(பம்பாய்)

மகாராஷ்டிரத்தில் இடம் பெற்ற வீதி விபத்தொன்றில் பத்துப்பேர்வரை உயிர் இழந்துள்ளனர்.

பயணிகளை ஏற்றிச்சென்று கொண்டிருந்த வான் ஒன்று லொறியுடன் மோதியதில் வான் சாரதி உட்பட பத்துப் பேர் அந்த இடத்திலேயே உயிர் இழந்

## "ஒரு பூவின் ஆசை"

மாதர் சூடினர்
எனக்கு மகிழ்ச்சியில்லை
ராஜாக்களின் போகத்தில்
சந்தோஷமில்லை
மதவெறியூட்டும் சந்நிலையில்
பூசைக்குப் போகிறேன்
அதிலும் திருப்தியில்லை
தேனி என்னைச் சுற்றிவருகிறது...
சாமி வலை!
விடுதலைக்காக இறந்த
வீரர் கல்லறையில் விழுகிறேனே!
அப்போதுதான்
பிறந்தபயனைப் பெறுகிறேன்.

வேதுல சத்ய நாராயணா
(-தெலுங்குக் கவிதை-)

## நினைவு கூருகின்றோம்...

1991 11-12

1986 ஆம் ஆண்டு இதேதினத்தில் வீரச்சாவு எய்திய
விநோத் (க. பரதன் - கோண்டாவில்)

தொண்டமானாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரச்சாவு எய்திய
2ஆம் லெப். அப்துல்லா (ராஜானந்தன் கிருஷ்ணானந்தன் - திருக்கோணமலை)

1987 ஆம் ஆண்டு யாழ். கொக்குவிலில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரச்சாவு எய்திய
ராஜி (ஞானமுத்து கிறிஸ்டி தனசீலன் - ஆத்திக்குழி, முருங்கன்)

கனகம்புளியடிச் சந்தியில் இந்தியப் படையினருடனான மோதலில் காயமுற்று சயனைட் உட்கொண்டு வீரச்சாவு எய்திய
கிதன் (வேல்நாயகம் திருச்செல்வராஜன் - மட்டுவில் வடக்கு)

கோண்டாவிலில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரச்சாவு எய்திய
சிலன் (தங்கராசா பேபிசிங்கம் - மடத்துவளவு, காங்கேசன்துறை)


இந்தியப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட இரு மாணவிகள்

கன்னாதிட்டி - இணுவில் பகுதியில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட இரு பெண்குழந்தைகள் உட்பட 6 தமிழர்கள்.

1988 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் தேசவிரோதிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட தேச பக்தரும், பொருளியல் ஆசிரியருமான
நாகேந்திரம் கிருஷ்ணானந்தன் (கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்)

சாவகச்சேரியில் தேசவிரோதிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ் இளைஞன்


உங்கள் குழந்தைகளின்
உயர்ந்த எதிர்காலத்திற்கு
எம்மிடம் ஒப்படையுங்கள்



NURSERY CLASSES

★ LOTUS 1-2-3
★ WORD STAR

புதிய பிரிவுகள் ஆரம்பம்:-

16-11-91
(சனி, ஞாயிறு வகுப்புகள்)

18-11-91
(திங்கள், புதன், வெள்ளி வகுப்புகள்)

மேலதிக விபரங்களுக்கு
Unikco Computer Centre
37, Clock Tower Road
Jaffna.

(B/8464)

...அருந்த இரு பெண்மணிகளை மின்னல் தாக்கியதில் அவர்கள் கருகிய எரிகாயங்களுக்... ...இருந்த இரு பெண்மணிகளுக்கே இந்நிலை ஏற்பட்டது. (20)

## 3 தொன் ஹெரோயின் கடத்தல் முறியடிப்பு

(கராச்சி)

பாகிஸ்தானில் மூன்று தொன் ஹெரோயினும், நாற்பது தொன் மரிஜுவானாவும் பொலிஸாரால் கைப்பற்றப் பட்டன.

இது உலகின் மிகப் பெரிய போதை வஸ்துக் கடத்தல் முயற்சி என்று தெரிவிக்கப் படுகின்றது. இந்தக் கடத்தல் தொடர்பாக இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தெற்குப் பாகிஸ்தான் பலுசிஸ்தானில் இந்தக் கடத்தல் முயற்சி பொலிஸாரினால் முறியடிக்கப்பட்டது.

11,000 போர்த்துக் குண்டுகளும் கைப்பற்றப்பட்டன. மாகாண பாகிஸ்தானில் சட்டப்படி நடைபெறவுள்ளது.

இரு கூடுதலாக சத்திர சிகிச்சைப் பிரிவுக்கு அனுமதிக்கப்படுவோர் இதனை அதிக கவனத்தில் கொள்ள வேண்டும் என்றும், சத்திரசிகிச்சைக்கு உட்படும் வேளையில் நகைகளைக் கழற்றி வைக்க வேண்டி இருப்பதால் நகைகளை தாதியர்களே பொறுப்பேற்க வேண்டியுள்ளது என்றும், இதனால் வைத்தியசாலை ஊழியர்களுக்கு சிரமம் ஏற்படுகிறது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (24)

## பண்ணிசைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

மாவட்ட மட்டத்திலான பண்ணிசைப் போட்டிகள் எதிர் வரும் 15 ஆம் திகதி கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது என யாழ். கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது.

## வீதி விபத்தில் பத்துப் பேர் பலி

(மன்னார்)

மகாராஷ்டிரத்தில் இடம்பெற்ற வீதி விபத்தொன்றில் பத்துப்பேர்வரை உயிர் இழந்துள்ளனர்.

பயணிகளை ஏற்றிச்சென்று கொண்டிருந்த வான் ஒன்று லொறியுடன் மோதியதில் வான் சாரதி உட்பட பத்துப் பேர் அந்த இடத்திலேயே உயிர் இழந்தனர் என்றும், ஐந்துபேர் மருத்துவமனை ஒன்றில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## தற்காலிக நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

மாவீரர் தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 21-11-91 ஆம் திகதியில் இருந்து 27-11-91 ஆம் திகதி வரை சகல ஆரம்ப நீதிமன்று / மேன்முறையீட்டு இணக்க மன்று / இணக்கமன்று விசாரணைகளும் தற்காலிகமாக நிறுத்தப்படுகின்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் சகல ஆரம்ப நீதிமன்று / மேன்முறையீட்டு இணக்க மன்று / இணக்கமன்று உறுப்பினர்களும் பொறுப்பாளர்களும் ஊழியர்களும் குறித்த மாவீரர் தினத்தில் அப்பகுதி அரசியல் பொறுப்பாளருடன் தொடர்பு கொண்டு மாவீரர் தினக்கிரியை ஒழுங்குகளைச் செய்வதற்கு ஒத்துழைக்குமாறு தமிழீழ நீதி நிர்வாகப் பிரிவுப் பொறுப்பாளர் கேட்டுள்ளார்.

உங்கள் குழந்தைகளின்
உயர்ந்த எதிர்காலத்திற்கு
எம்மிடம் ஒப்படையுங்கள்



NURSERY CLASSES

- முற்றிலும் புதுமையான முறையில்
- பயிற்சி பெற்ற ஆசிரியர்களால்
- சிறுவர்களுக்கான சகல வசதிகளுடனும்

1992 இல் ஆரம்பமாகின்றது

குறிப்பிட்டளவு சிறுவர்களுக்கே
இடவசதி தற்போது உள்ளது
பெயர்களை உடனே பதிந்து கொள்ளுங்கள்

ESTD:-1979 REGD:-No J/7995
The Express Institute
IRUPALAI - KOPAY

பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் தேவைப்படுவதால்
விரும்புவோர் நேரில் வந்து விண்ணப்பிக்கவும்.

(B/8463)

## 1991 11-12

1986 ஆம் ஆண்டு இந்தியனத்தில் வீரச்சாவு எய்திய
**வினோத்** (க. பரதன் - கோண்டாவில்)

திருகோணமலையில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரச்சாவு எய்திய
**2ஆம் லெப். அப்துல்லா** (ராஜானந்தன் கிருஷ்ணானந்தன் - திருக்கோணமலை)

1987 ஆம் ஆண்டு யாழ். கொக்குவிலில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரச்சாவு எய்திய
**ராஜி** (ஞானமுத்து கிரிக்கி தனசீலன் - ஆத்திக்குழி, முருங்கன்)

கனகம்புளியடிச் சந்தியில் இந்தியப் படையினருடனான மோதலில் காயமுற்று சயனைட் உட்கொண்டு வீரச்சாவு எய்திய
**கீதன்** (வேல்நாயகம் திருச்செந்திலைவரன் - மயிலிட்டி வடக்கு)

கோண்டாவிலில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரச்சாவு எய்திய
**சீலன்** (தங்கராசா பேபிசிங்கம் - மட்டுவில், காங்கேசன்துறை)

இந்தியப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட இரு மாணவிகள்

கன்னாகம் - இணுவில் பகுதியில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட இரு பெண்குழந்தைகள் உட்பட 6 தமிழர்கள்.

1988 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் தேசவிரோதிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட தேச பக்தரும், பொருளியல் ஆசிரியருமான
**நாகேந்திரம் கிருஷ்ணானந்தன்** (கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்)

சாவகச்சேரியில் தேசவிரோதிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ் இளைஞன்

1989 ஆம் ஆண்டு வட்டமடு அணைக்கட்டுப் பகுதியில் தேசவிரோதிகள் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் வீரச்சாவு எய்திய
**குகன்** (கா. பாபு - அக்கரைப்பற்று - 08)

1990 ஆம் ஆண்டு மட்டக்களப்பு கல்லடி - மஞ்சந்தொடுவாய் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரமரணமெய்திய
**துடிப்பான்** (மயிலடித்தீவு, கொக்கட்டிச்சோலை)

முப்பிளாவில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரச்சாவு எய்திய
**மீனா** (சுதர்சினி தங்கத்துரை - சாடிப்போக்கு, இலிதொட்சி)

மாங்குளத்தில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரச்சாவு எய்திய
**கமலன்** (இராமசாமி மூர்த்தி - இராமனூர், புளியங்குளம் வவுனியா)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B/8462)

※ சிந்தனைக்கு ※

காலத்தோடு ஒத்து வாழ,
தம் பழக்கங்களை மாற்றுவதில்,
தவறு ஒன்றுமில்லை.

— டிஸ்ரேலிஸ்

ஈழநாதம்

31, மகேந்திரவீதி, யாழ்ப்பாணம், 12-11-1991
தொலைபேசி
[illegible]
த.பெ எண் 05

# நெருக்கடியை நீக்க ஒத்துழைப்போம்

யாழ். குடா நாட்டில் நாளுக்கு நாள் உணவு நெருக்கடி அதிகரித்துவருகின்றது அரசாங்க உணவுக் களஞ்சியங்கள் வெறுமையாகி விட்டன. இந்த நெருக்கடியான சூழ்நிலைக்கு முகம் கொடுக்கும் வகையில் பொதுமக்கள் இன்று நடைமுறையில் உள்ள உணவு பங்கீட்டுத் திட்டத்திற்கு ஒத்துழைக்குமாறு பாவனையாளர் பாதுகாப்புக்குழு மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

யாழ் குடா நாட்டுக்கான தரை வழிப்போக்குவரத்துக்கள் தடைப்பட்டதைத் தொடர்ந்து அத்தியாவசியப் பொருட்களுக்கு ஏற்பட்ட தட்டுப்பாடும், விலை ஏற்றமும் பொதுமக்களைப் பெரிதும் பாதிப்படையச் செய்வதை கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் பாவனையாளர் பாதுகாப்பு குழு அமைக்கப்பட்டது இதன் பிரதான நோக்கம் அரச, தனியார் வர்த்தகர்களின் அத்தியாவசியப் பொருட்களின் கையிருப்பைக் கொண்டு மக்களுக்கு ஒரு சீரான, ஒழுங்கான விநியோகத்தை மேற்கொள்வதாகும்.

ஆனால் இவ் விநியோகத் திட்டத்திற்கு தனியார் வியாபாரிகளிடம் இருந்து பூரண ஒத்துழைப்புக் கிடைக்கவில்லை எனத் தெரிகிறது இதுவரை மிகவும் குறைந்தளவு வியாபாரிகளே தமது கையிருப்பை வெளிக்காட்டியுள்ளனர் அதிலும் எவ்வளவு உண்மையான தரவுகளைக் கொண்டுள்ளன என்பது சந்தேகமே. வியாபாரிகளிடம் பாவனையாளர் பாதுகாப்புக்குழு ஒருபோதும் பொருட்களைப் பறிமுதல் செய்யப்போவதுமில்லை அன்றிப் பொருட்களை கொள்விலையிலும் விட குறைந்த விலையிலும் விற்பனை செய்யுமாறோ அன்றி தம்மிடம் ஒப்படைக்குமாறோ கோரவில்லை. தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள உணவு நெருக்கடியைத் தவிர்க்க மக்களை நெருக்கடியில் இருந்து காப்பாற்ற ஒத்துழைக்குமாறே கோருகின்றது. இந்நிலையில் வர்த்தகர்கள் தமது கையிருப்புக்களை மறைப்பதும் சட்டத்தின் ஓட்டைகளைத் தேடி கொள்ளை இலாபமடிக்க முற்படுவதும் மனித நேயமற்ற செயல்.

[illegible]

## கண்ணிவெடித்

எழும் பலத்த சேதமடைந்தது.

நேற்று படையினர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போதே இச்சம்பவம் இடம்பெற்றதாக பாதுகாப்பு அமைச்சை ஆதாரம் காட்டி நேற்று மாலை வானொலி அறிவித்தது.

## கப்பலில்

கிருஷ்ணன் தெரிவித்தார்.

பாலன் மாஸ்ரர், சிவன் (பொறியியலாளர்), மகேந்திர சிராமணி மேனன் அன்னமுத்து, விக்டோ ராஜா, விவேகானந்தா, ராஜகுமார், சந்திரகுமார், ரவிதரன், சாமி ஆகியோரே கைது செய்யப்பட்டவர்கள் என்றும் அத்துடன் விவேகானந்தா அளித்த தகவலின்படி இந்தக் கப்பலின் கப்டனான சந்தசாமி என்பவர் இந்த இருவரைப் பற்றி [illegible] பொறுப்பை கையளித்துவிட்டு படகொன்றில் தப்பிச் சென்று விட்டார் என்றும் அந்த அதிகாரி தெரிவித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

# இந்தியா 2000 கோடி ரூபா ஆயுதம் விற்பனை

இந்தியா 2000 கோடி ரூபாய் பெறுமதியான இராணுவ சாதனங்களை வெளிநாடுகளுக்கு விற்கப்போவதாக இந்திய பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

நேற்று முன்தினம் பொருளாதார பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டியொன்றிலே பாதுகாப்பு இணையமைச்சர் எம். கிருஷ்ணகுமார் இதனைத் தெரிவித்தார்.

இந்த இராணுவ சாதனங்கள் விற்பது தொடர்பாக பேரங்கள் பேசுவதற்கு உயர்நிலைக் குழுவொன்று நியமிக்கப்பட்டிருப்பதாகவும் 136 கோடி ரூபாய் பெறுமானத்திற்கான ஆயுதங்கள் இதுவரையும் ஏற்றுமதி செய்யப்பட்டதாகவும் கிருஷ்ணகுமார் தெரிவித்தார்.

# ஆசிரியருக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவு

(மன்னார்)

மன்னார் மாவட்ட ஆசிரியர்களுக்கும், கல்வித்திணைக்கள ஊழியர்களுக்கும் ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மன்னாரில் இருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## புதியதீர்மானத்தை

★ தனியார் வர்த்தகர்களினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பயறு, உழுந்து, உழுத்தம்பருப்பு, கடலை, கடலைப்பருப்பு, கௌபீ ஆகியவற்றை ப.நோ.கூ. சங்கம் நியாயமான விலையில் உடனடியாக கொள்வனவு செய்ய வேண்டும். 2 ஆம் வார விநியோகத்தின் போது மைசூர் பருப்பு வழங்கப்படமாட்டாது. அதற்குப்பதிலாக ஒவ்வொரு குடும்பத்திற்கும் உச்சமாக 2 கிலோவிற்கு மேற்படாது இப் பருப்பு வகைகளைப் பகிர்ந்தளிக்க வேண்டும்.

★ நுகர்வோரது வேண்டுகோளின்படி வாராந்தப் பங்கீட்டை தனியார் கடைகளில் கொள்வனவு செய்ய விரும்பு [illegible]

[illegible]

## மாவீரர் நாளை

ளே, எங்கள் வரலாறு என்ற பெருமையுடன் தனித்துவமாக வாழ்வதையே வாழ்க்கையாக நினைத்தீர்கள் எதிர்கால சந்ததி நிம்மதியாக, தனித்துவமாக, சுதந்திரமாக வாழ வேண்டும் என்பதற்காய், மரணத்தையே மகிழ்வோடு ஏற்றீர்கள்.

தமிழ்த்தாயின் மானத்தைக் காக்கவெனப் புறப்பட்ட மறவர்களே, உம்மை இல்லை இனவாத இருள் சூழ்ந்த [illegible]

[illegible]

## ஈராக்கிற்கு கடன்

இலங்கைத் தேயிலையை கொள்வனவு செய்வதற்கு ஈராக்கிற்கு வர்த்தக வங்கியொன்றின் மூலம் வெளிநாட்டு நாணயத்தில் கடன் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

## தன்னாதிக்கத்திற்கு

தைய அரசாங்கம் எந்த ஒரு வெளிநாட்டுச் சக்திக்கும் அடிபணிந்து நடக்கப்போவதில்லை என்று கூறினார்.

வெளிநாட்டுச் சக்திகளுக்கு [illegible] இந்த நாட்டில் தான் அனுமதி வழங்கப் போவதில்லை என்றும்,

மக்களின் உரிமைகளையும், நலன்களையும் காப்பாற்ற அரசாங்கம் உறுதி பூண்டுள்ளது வன்செயல்களை எதிர்த்துப் போராட கோடிக்கணக்கான பொருள் செலவிடப்படுகிறது என்றும், பிரேமதாச தனது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

## விசேட

தம்புள்ளை. ஆனால் 1990 ஆண்டு பரீட்சையை நடத்த முடியாததற்கான நிலைகளை நாம் அறிவோம். என்று செயலாளரின் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது

ஆகஸ்ட் 1991-ல் க.பொ.த (உயர்தரம்) பரீட்சை [illegible]

[illegible]

## விரைவில்

[illegible]

## மதகுருமார

[illegible]

## இலங்கை திரும்பும் அகதிகளை மீளகுடியமர்த்தும் நிலையில் யூ. என். எச். சி. ஆர். இல்லை

(மன்னார்)

தமிழ் நாட்டில் இருந்து நாடு திரும்ப இருக்கும் அகதிகளை மீளக்குடியமர்த்தும் நிலையில் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயம் இருக்கவில்லை.

ஆனால் நாடு திரும்பும் அகதிகளை அகதிமுகாமில் வைத்துப் பராமரிக்க ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயம் தயாராக உள்ளதாக கூறப்படுகின்றது.

**நான்கு அகதிகள் வருகை:**

தமிழ் நாட்டில் தங்கியிருந்த அகதிகளில் நான்கு பேர் மட்டுமே கடந்த மாதம் மன்னார் மாவட்டத்தில் உள்ள பேசாலை அகதி முகாமிற்கு வந்து சேர்ந்தனர்.

இவர்கள் தமது சொந்தச் செலவிலேயே நாடு திரும்பியதாக கூறினர். இவர்கள் நாடு திரும்புவதற்கு இலங்கை இந்திய அரசுகள் எதுவும் உதவவில்லை. சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகள் தொடர்வதால் அகதிகள் நாடு திரும்பினாலும் கூட அவர்களை மீளக்குடியமர்த்தி அவர்களுக்கான புனர்வாழ்வு நடவடிக்கைகளில் மேற்படி ஸ்தானம் ஈடுபடமுடியாத நிலை உருவாகியிருப்பதாக தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

## அமைச்சர் வீட்டில் காரியாலயம்

(கொழும்பு)

வவுனியா பல்கலைக்கழகக் கல்லூரியின் இணைப்பதிகாரிக்கான காரியாலயம் கல்வி ராஜாங்க அமைச்சர் திருமதி இ. புலேந்திரனின் வீட்டிலேயே அமைக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தொற்றுநோய் அபாயம்; சுகாதாரப்பகுதி எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் சுகாதார குறைபாட்டால் பல தொற்று நோய்கள் பரவி வரும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

வயிற்றோட்டம், வாந்திபேதி, நெருப்புக் காய்ச்சல், மஞ்சள் காமாலை முதலியனவும் சலிச்சுரம், நெஞ்சுத்தடிமல், சுவாச அடைப்பு போன்ற நோய்களும் சிரங்கு போன்ற சரும நோய்களும் மலேரியா, யானைக்கால், டெங்கு, மூளைக்காய்ச்சல் ஆகிய நோய்கள் பெருமளவில் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக சுகாதாரப் பகுதியினர் எச்சரித்துள்ளனர்.

---

நான்கு

உபகரணம், மருந்துப்பொருள்கள் மருத்துவ ஊழியர்கள், போன்றவை இல்லை அல்லது பற்றாக்குறையாக உள்ள நிலைமையில் இப்பகுதி மக்கள் முழுமையான மருத்துவ சேவையைப் பெறவில்லை, என்றும் இந்த நிலைமை தொடர்ந்தும் இருந்தால் இப்பகுதி மக்கள் மேலும் நீண்ட காலம் மேற்படி துறையில் பின்னோக்கித் தள்ளப்படக்கூடிய சந்தர்ப்பம் உண்டு என்றும் தெரிவித்தார். (க)


---

தேசபக்தர்

பொருளியலாளர்

## அமரர் திரு. நா. கிருஸ்ணானந்தன் அவர்களின்

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



முளையாக 10-1-1951 | விதையாக 12-11-1988

அமரர் கிருஸ்ணானந்தன் ஞாபகார்த்த

**நினைவுப் பேருரை**

**இலங்கையில் தமிழ் மன்னர்களின் ஆட்சி - ஒரு நோக்கு**

நிகழ்த்துபவர்: திரு. ப. புஸ்பரத்தினம்
விரிவுரையாளர், வரலாற்றுத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்

இடம்: யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கு
காலம்: 19-11-91 பி. ப. 4 மணி

**ஆர்வலர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

(B/3466) அமரர் கிருஸ்ணானந்தன் நினைவுப் பணிமன்றம்

---

வகுப்புத் தொழிலாளருக்கு

## ஒருவார இலவச உணவு புனர்வாழ்வுக் கழகம் உதவி

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா அரசின் திட்டமிட்ட பொருளாதாரத் தடையால் வருமானம் இழந்த வடபிராந்திய வகுப்புத் தொழிலாளர்களுக்கு ஒருவார இலவச உலர் உணவினை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வழங்கியது.

நேற்றுக் காலை முதல் மேற்படி கழகத்தின் தலைமைச் செயலகத்தில் வைத்து மேற்படி உலர் உணவு விநியோகிக்கப்பட்டது.

இவர்கள் ஒருநபருக்கு இரண்டு கிலோ அரிசி அரைக்கிலோ சீனி, அரைக் கிலோ மா, நூறு கிராம் பருப்பு ஆகியவற்றையும் குழந்தைகள் உள்ள குடும்பத்திற்கு பால் மாவினையும் வழங்கினர். (ச)

## அரசியல் அமைப்பில் மாற்றம்; பிரான்சில் வாக்கெடுப்பு

(பரிஸ்)

பிரான்சின் அரசியலமைப்பில் பாரிய மாற்றமொன்றை அடுத்த வருடம் ஏற்படுத்த பொது ஜன அபிப்பிராய வாக்கெடுப்பிற்காக விடப்படும் என்று, பிரான்சிய ஜனாதிபதி மித்ரோன் அறிவித்துள்ளார்.

கொண்டுவரப்படும் மாற்றங்களில் ஜனாதிபதியின் பதவிக்காலம் ஏழு வருடங்களிலிருந்து ஐந்து வருடங்களாகக் குறைக்கப்படும் என்பதும், பாதிக்கப்பட்டுள்ள பிரஜைகள் நேரடியாக அரசியல் அமைப்பு நீதிமன்றங்களுக்குச் சென்று முறையிடும் உரிமையும் அடங்குகின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## டிசம்பர் 9 முதல் 18 வரை க. பொ. த. (சா) பரீட்சை

(கொழும்பு)

வடக்கு கிழக்கு உட்பட நாட்டின் சகல பகுதிகளிலும் 1991ஆம் ஆண்டிற்கான க. பொ. த. சாதாரணதரப் பரீட்சை டிசம்பர் 9ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரை நடைபெறும் என பரீட்சை ஆணையாளர் ஆதர் வெதமுல்ல தெரிவித்துள்ளார்.

இந்தப் பரீட்சையில் ஐந்து லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் தோற்றவுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

வடபகுதியிலும் பரீட்சைகள் நடைபெறும் என்றும், இதற்கான ஒத்துழைப்பு சகல தரப்பிலும் இருந்து வந்துள்ளதாகவும் ஆதர் வெதமுல்ல தெரிவித்தார்.

## தவறான திசையில் நரசிம்மராவ் செல்கிறார் - பொம்மை

கொழும்பில் 'சார்க்' உச்சி மாநாட்டின் ஒத்திவைப்பிற்கு வழிவகுத்திட்ட நிலைமை தொடர்பான தப்பெண்ணத்திற்கு ராஜீயத் துறையிலான குறைபாடுகள் தான் காரணமென்று ஜனதாதளின் தலைவர் எஸ். ஆர். பொம்மை குற்றஞ் சாட்டியுள்ளார்.

கர்நாடகத்தில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய பொம்மை இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் தவறான திசையில் சென்று கொண்டிருக்கிறார் என்று எச்சரித்தார்.

பத்மநாபா கொலை

## ஐவரைக் கைது செய்ய நீதிமன்றம் உத்தரவு

(சென்னை)

பத்மநாபா கொலை தொடர்பாக விசாரணை நடத்திவரும் விசேட நீதிமன்றம் மேலும் ஐவரை சரண் அடையுமாறு அல்லது கைது செய்யுமாறு உத்தரவிட்டுள்ளது.

ராஜீவ், பத்மநாபா கொலைகள் தொடர்பாக விசாரணை நடத்தி வரும் குழுவே இந்த உத்தரவை விடுத்துள்ளதாகவும் குணராஜா, சிவந்தான், றஞ்சன் அல்லது ராஜன், பிறேமா, நளினி ஆகியோரே இந்த ஐவரும் ஆவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## நெருக்கடியில் தள்ளவே சிறிமா சீனா சென்றார்

(கொழும்பு)

சார்க் உச்சி மாநாடு கொழும்பில் நடைபெறவிருந்த காலத்தில் எதிர்க்கட்சி மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைவியான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா நாட்டை விட்டு வெளியேறியதை அரசியல் வட்டாரங்கள் சில குறை கூறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சார்க் தலைவர்களைச் சந்திக்க விரும்பாமலும் சார்க் மாநாடு குறித்த அரசியல் நெருக்கடியில் பங்குபற்றாமல் மெதுவாக விலகிக் கொள்ளவே சிறிமாவோ பயணமொன்றை மேற்கொண்டு சீனாவுக்குப் போயுள்ளார் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்களில் சொல்லப்படுகிறது.

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 12 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.